

புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ–மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார். நிகழ்வுகளில் மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் ராஜராஜன், ஒன்றியச் செயலாளர்கள் கே.பி.கே.டி. தங்கமணி, அரு.வடிவேல், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மணிமொழி மனோகரன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சண்முகம், அறந்தாங்கி மாவட்ட கல்வி அலுவலர் ஜெயந்தி, ஆலங்குடி. தாசில்தார் பெரியநாயகி, தலைமை ஆசிரியர் கோவிந்தன், க.நைனா முகம்மது, நாராயணசாமி, மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் நடைபெற்ற திருமணத்தை நடத்தி வைத்து தொடங்கி வைத்ததையடுத்து நாகை மாவட்டம் சிக்கல் நவநீதேஸ்வரர் கோயிலில் நடைபெற்ற 19 இணையர்களின் திருமணத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். உடன் கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலி, கோட்டாட்சியர் அரங்கநாதன், நகரக் கழகச் செயலாளர்கள் இரா.மாரிமுத்து, நாகூர் எம்.ஆர். செந்தில்குமார், அறங்காவலர் குழு நாகை மாவட்ட தலைவர் சி.நாகரத்தினம், அறநிலையத்துறை இணை ஆணையர் குமரேசன், உதவி ஆணையர் ராணி மற்றும் பலர் உள்ளனர்.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில்

# 560 பயனாளிகளுக்கு ரூ. 2 கோடியே 61 இலட்சம் மதிப்பிலான கடன் உதவிகள்!

## உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்!

தஞ்சாவூர், அக்.24-

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் சாரதா மஹாலில் கூட்டுறவுத் துறை சார்பில் வங்கிக் கடனுதவி மற்றும் தாட்கோ மானியத்தை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமை வகித்தார். மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம் முன்னிலை வகித்தார்.

உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன் கூட்டுறவுத்துறை சார்பில் 560 பயனாளிகளுக்கு ரூபாய் 2 கோடியே 61 லட்சம் மதிப்பிலான கடன் உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் வங்கி கடனுதவி மற்றும் தாட்கோ மானியம் வழங்கும் விழா நடைபெற்றது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையின் கீழ் 340 கூட்டுறவு நிறுவனங்கள் (2 மத்திய கூட்டுறவு வங்கிகள், 243 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 6 நகர கூட்டுறவு வங்கிகள். 1 நகர கூட்டுறவு கடன் சங்கம், 53 பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள். 8 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள், 5 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள். 2 கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், 9 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள். 1 கூட்டுறவு அச்சகம், 1 கூட்டுறவு ஒன்றியம் மற்றும் 8 மாணவர் கூட்டுறவு பண்டகசாலைகள்) செயல்பட்டு வருகின்றன.

கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக பயிர்க்கடன், கால்நடை பராமரிப்புக் கடன், சுயஉதவிக் குழுக்கடன், மாற்றுத்திறனாளிகளுக்கான கடன், வீட்டுக் கடன், வீட்டு அடமானக் கடன், சிறு தொழில் கடன், டாம்கோ. டாப்செட்கோ கடன், கைம்பெண் கடன் மற்றும் தானிய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் இன்று தஞ்சாவூர் மாவட்டத்தில் 266 நபர்களுக்கு தாட்கோ கடன் ரூ.143.24 இலட்சமும், 22 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 267 பயனாளிகளுக்கு ரூபாய் 102.00 இலட்சமும், 9 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளி கடன் ரூபாய் 7.38 இலட்சம் மதிப்பிலும், பண்ணை சாரக் கடன் 18 பயனாளிகளுக்கு ரூபாய் 9.09 லட்சம் என மொத்தம் 560 பயனாளிகளுக்கு ரூபாய் 261.71 லட்சம் கடன் உதவி இன்று வழங்கப்பட்டது. இது போன்ற பல்வேறு நலத்திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர், வழங்கியுள்ளார். இத்திட்டங்களை பொது மக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி. செழியன், தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கும்பகோணம் சார் ஆட்சியர் செல்வி.ஹிருத்யா எஸ்.விஜயன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் செல்வி.சி. த மி ழ் ந ங் ை க , கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சு.முத்துக்குமார், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி, தாட்கோ மாவட்ட மேலாளர் ரெங்கராஜன், திருவிடைமருதூர் ஒன்றிய குழுத் தலைவர் .சுபா திருநாவுக்கரசு, ஒன்றிய குழுத் துணைத் தலைவர் பத்மாவதி கிருஷ்ணராஜ், திருவிடைமருதூர் முன்னாள் ஒன்றியக் குழுத் துணைத் தலைவர் ரெ.கருணாநிதி, திருவிடைமருதூர் பேரூராட்சி துணைத் தலைவர் சுந்தர.ஜெயபால், திருப்பனந்தாள் ஒன்றிய குழுத் துணைத் தலைவர் கோ.க. அண்ணாதுரை, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் இளவரசி சின்னசாமி, கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர் க.பாலமுருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

மயிலாடுதுறை, அக். 24-

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் இன்று (24.10.2024 வியாழன்) மாலை 4.00க்கு மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமையில் நடைபெறுகிறது.



கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், சட்ட மன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக் கொள்கறோம்.

பொருள்:

1. தொகுதி பார்வையாளர் அறிமுகம்,

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி நூர்ஜகான் பேகம்

### அக்டோபர் 24 (2018)



கழகத்தின் கொள்கை முழக்கக் குரலாக - தலைவர் கலைஞர் அவர்களின் போர்ப்பரணி பாடும் பெண் சிங்கமாகத் திகழ்ந்த இவர், திருச்சி மாவட்டம் கரூரில் பிறந்து, 1972ல் கழகத்தின் தொண்டராக இணைந்து, தமிழகம் முழுவதும் சுற்றி வந்து, கழகத்தின் லட்சியங்களையும் செயல் திட்டங்களையும் பிரச்சாரம் செய்து வந்தவர்.

திண்டுக்கல் நகர 10வது வட்டக் கிளைச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, மாவட்டம் முதல் மாநிலம் வரை மகளிர் அணியில் தலைவர், செயலாளர், புரவலர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

திண்டுக்கல்லில் நகர் மன்ற உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டு மக்கள் பணியினைச் சீரிய முறையில் ஆற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் எல்லாம் பங்கேற்று, சிறைச் சாலைகளுக்குச் சென்றவர். தலைவர் கலைஞர் அவர்கள், மதுரையிலிருந்து திருச்செந்தூருக்கு “நீதிகேட்டு நெடும் பயணம்” சென்றபோது, எட்டு நாட்களும் தொடர்ந்து தலைவர் அவர்களுடன் நடந்து சென்றவர். தலைமைக் கழகத்தால் வழங்கப்படும் “கலைஞர் விருதினை”முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருக்கரத்தால் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### திராவிடம் என்பது தமிழ் மண்ணிலே ஊறிப்போன ஒன்று!

# திராவிட கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் அதை முன்னெடுத்துச் செல்லும்!

## புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, அக்.24-

புதுக்கோட்டை திருவப்பூர் முத்துமாரியம்மன் கோயிலில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை சார்பில் 4 ஜோடிகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த இலவச திருமண நிகழ்ச்சியித் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துகொண்டு மணமக்களுக்கு மாங்கல்யத்தை எடுத்து கொடுத்து 4 ஜோடிகளுக்கு திருமணத்தை நடத்தி வைத்தார்.

மேலும் தமிழ்நாடு அரசு சார்பில் இருபதுக்கு மேற்பட்ட சீர்வரிசை பொருள்களை மணமக்களுக்கு வழங்கியும் அதேபோல் புதுக்கோட்டை மாவட்ட திமுக சார்பில் ஒவ்வொரு திருமண ஜோடிக்கும் பத்தாயிரம் ரூபாய் நிதியையும் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் புதுக்கோட்டை சட்ட மன்ற உறுப்பினர் டாக்டர் வை முத்துராஜா உள்ளிட்ட அறநிலையத்துறை அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

திருமணத்தை நடத்தி வைத்த பின் செய்தியாளர்களை சந்தித்த தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி,

தமிழ்நாடு ஆளுநரை திரும்பப் பெற வேண்டும் என்பது ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கை,

எடப்பாடி பழனிச்சாமி பகல் கனவு காண ஆரம்பித்துவிட்டார். வேறு வேலையில்லாததால். திமுக கூட்டணியை அவர் உடைக்கவும் முடியாது, கொளுத்தவும் முடியாது, பிரிக்கவும் முடியாது, நசுக்கவும் முடியாது. இது அனைத்தும் அவர் சார்ந்திருக்க கூடிய கட்சிக்கு வேண்டுமென்றால் ஏற்படுமே தவிர தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் கட்சிக்கும் தி.மு.க. கூட்டணிக்கும் எந்த ஒரு சிறு பாதிப்பும் ஏற்படாது.

தமிழ்த்தாய் வாழ்த்து இருக்காது என்பது நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமானின் கருத்தாக இருக்கலாம். தமிழ் தாய் வாழ்த்து என்பது தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை மக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டு அனைவராலும் பாடப்பட்டு வருகிறது. அவர் இன்று அதில் புதிய சர்ச்சையை கிளப்பி உள்ளார். ஆனால் ஒன்று மட்டும் உறுதி தமிழ்நாடு திராவிடம் இதை இரண்டையும் தமிழ் மண்ணில் இருந்து பிரிக்க முடியாத சொற்கள். தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் திராவிடம் என்ற பெயரோடு தான் இருக்கிறது. இங்கு உள்ள கட்சிகள் திராவிடம் சார்ந்த கட்சிகள் தானே தவிர திராவிடம் சாராத கட்சிகள் இல்லை. யாரும் கட்சி ஆரம்பித்தால் கூட திராவிடம் சார்ந்து தான் கட்சியை ஆரம்பிக்கின்றனர். திராவிடம் என்பது தமிழ் மண்ணிலே ஊறிப்போன ஒன்று. அதை திராவிட கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் முன்னெடுத்துச் செல்லும்.

ஒரு இயக்கத்தை நாங்கள் அழிக்க வேண்டிய அவசியம் கிடையாது அந்த இயக்கத்தின் தலைமை பலவீனமாக இருந்துவிட்டால் அந்த இயக்கம் தானாகவே அழிந்து விடும். இன்று எடப்பாடி பழனிச்சாமியின் தலைமை பலவீனமாக உள்ளது. அதனுடைய எடுத்துக்காட்டு தான் இந்த குழப்பம்.

**சீமானின் சாதனை!**

அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர யாரும் தயாராக



இல்லை, நம்பிக்கைக்குரிய இணையாக அ.தி.மு.க.வை ஏற்றுக்கொள்ள எந்த கட்சியும் தயாராக இல்லை அவரும் என்னென்னமோ எண்ணி வலைவீசி பார்க்கிறார் யாரும் அவர் பக்கம் செல்வதற்கு தயாராக இல்லை. அவரை திரும்பி கூட பார்க்கவில்லை அது தான் உண்மை.

சீமான் கற்பனையில் எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டு போகலாம். ஏதாவது குட்டி கலாட்டா செய்ய வேண்டும் என்பதுதான் அவரது நோக்கம். திருமாவளவனை பொறுத்தவரை தி.மு.க. கூட்டணியில் உறுதியோடு இருக்கிறார் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அரசு அமைவதில் அவர் உறுதியோடு இருக்கிறார் என்று தெரிவித்தார்.

# கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் அறிக்கை!

கடலூர், அக். 24 -

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைப்படி கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படி கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ.நந்தகோபால கிருஷ்ணன் தலைமையில் நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில் 25.10.2024



அன்று மாலை 3.30 மணியளவில் நடைபெறுகிறது.

அதுசமயம் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக செயலாளர்கள் தொ.மு.ச. நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கழக மூத்த நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாள் விழா சிறப்பாக கொண்டாடுவது குறித்து.

2. தொகுதி பொறுப்பாளர்கள் அறிமுகம்.

3. கழக ஆக்க பணி.

இவ்வாறு அமைச்சர் சி.வி.கணேசன் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அர. நடராசன்

### அக்டோபர் 24 (1987)



இளம்வயதிலேயே கழகத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

கிளைச் செயலாளர், உப்பிலியாபுரம் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஒன்றிய பெருந்தலைவர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்றவர்.

நெருக்கடி கால மிசாவில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**